


**30.04.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. மத்திய அமைச்சரவை கூட்டம் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

2. **ICSE** மற்றும் **ISC** 10, 12-ம் வகுப்பிற்கான தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

3. தமிழ்நாடு மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி சிறப்பு திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

4. மக்களுடன் முதல்வர் முகாமின் போது மகளிர் உரிமைத்தொகை பெற பெண்கள் விண்ணப்பிக்கலாம் என மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

5. மேட்ரிட் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரோஹன் போப்பன்னா, ஷெல்டன் இணை இன்று களமிறங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖

<u>அமைச்சரவை கூட்டம்</u>

மத்திய அமைச்சரவை கூட்டம் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய முடிவுகள் குறித்து இன்று பிற்பகல் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பஹல்காம் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நடத்தப்பட வேண்டுமென்று எதிர்கட்சிகள் கோரும் நிலையில், இதுதொடர்பான முடிவும் இதில் எட்டப்பட்டிருக்கும் என தெரிகிறது.

இதனிடையே பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டமும் இன்று நடைபெறவுள்ளது.

முன்னதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித்தோவல், ராணுவ தளபதி ஜென்ரல் அனில் சௌஹான், முப்படைத் தலைவர்கள் உள்ளிட்டோருடன் நேற்று பிரதமர் தமது இல்லத்தில் முக்கிய ஆலோசனைகளை மேற்கொண்ட நிலையில் இன்றைய அமைச்சரவை கூட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

❖❖❖❖❖

<u>நடுவர்சங்க மாநாடு</u>

இந்திய நடுவர்சங்க மாநாடு புதுதில்லியில் வரும் சனிக்கிழமை நடைபெறுகிறது.

நாட்டின் தலைமை வழக்கறிஞர் அலுவலகமும், மத்திய சட்ட நீதித்துறை அமைச்சகமும் இணைந்து இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளதாக நாட்டின் தலைமை வழக்கறிஞர் ஆர். வெங்கட்ரமணி தெரிவித்துள்ளார்.

பல்வேறு மத்தியஸ்த நிறுவனங்கள் பங்கேற்கும் இம்மாநாட்டில் சுமூக தீர்வு தொடர்பான சிறந்த நடைமுறைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

நீதிமன்றங்களில் தேங்கி கிடக்கும் ஏராளமான வழக்குகளை விரைந்து முடிப்பதை நோக்கமாக கொண்டு இம்மாநாடு நடைபெறுவதாக சட்டத்துறை இணைசெயலர் திரு. அஜய் அரோரா தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖

## <u>ICSE</u>

10, 12-ம் வகுப்பிற்கான **ICSE** மற்றும் 12-ம் வகுப்பிற்கான **ISC** தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

இரு தேர்வுகளிலும் மாணவிகளின் தேர்ச்சி விகிதம் மாணாக்கரை விட அதிகமாகும்.

**cisce.org** மற்றும் **results.cisce.org** இணையதளங்களில் மாணாக்கர் முடிவுகளை தெரிந்து கொள்ளலாம்.

இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் **ICSE** தேர்வையும், 99 ஆயிரத்து 551 மாணாக்க **ISC** தேர்வையும் எழுதியுள்ளனர்.

❖❖❖❖❖

<u>தர்மேந்திர பிரதான்</u>

ஒரே நாடு! ஒரே தேர்தல் முறையை வலியுறுத்தும் சிறப்பு விழிப்புணர்வு ஓட்டத்தை மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தில்லி பல்கலைக்கழகத்தில் இன்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், தேர்தல் அடிக்கடி நடைபெறுவது நாட்டின் மேம்பாட்டிற்கு உகந்தது அல்ல என்று கூறினார்.

ஒரே நாடு! ஒரே தேர்தல்! முறை நாட்டை வலுப்படுத்தும் என்று கூறிய அவர் இதை வலியுறுத்துவதற்காகவே இந்த விழிப்புணர்வை ஓட்டம் நடைபெறுவதாக கூறினார். இதில் ஏராளமான மாணாக்கர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖

ராமானுஜம்

கணிதமேதை ராமானுஜத்தின் வாழ்க்கையை சித்தரிக்கும் ராமானுஜம் என்ற தலைப்பிலான புத்தகத்தை தேசிய அருங்காட்சியகம் இன்று புதுதில்லியில் வெளியிட்டுள்ளது.

ஈரோடிலிருந்து தொடங்கிய ராமானுஜத்தின் வாழ்க்கை பாதை, அவருடைய கணித கோட்பாடுகள், கணக்குத்திறன்கள், தொடர் பின்னங்கள், முடிவில்லா கணித தொடர்கள் போன்றவை இதில் இடம்பெற்றுள்ளது

தேசிய அருங்காட்சியகத்தின் தலைமை இயக்குநர் திரு. அருண் சிங்கால் மற்றும் டாக்டர் தேவேந்திர குமார் ஷர்மா ஆகியோர் இந்த புத்தகத்தை வடிவமைத்துள்ளனர்.

மாபெரும் கணித மேதையின் இப்புத்தகம் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு உத்வேகமாக திகழும் என்று திரு. அருண் சிங்கால் தெரிவித்துள்ளார்.

ராமானுஜத்தின் தேற்றங்களும், கணித முடிவுகளும் இன்றளவும் உலக கணித மேதைகளை வியப்படைய செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖

கொல்கத்தா விபத்து

கொல்கத்தா உணவக தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்ச ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என் பிரதமர் அலுவலக இணையதள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு நேரிட்ட இந்த தீ விபத்தில் கரூர் மாவட்டத்தை சேர்ந்த 3 பேர் உட்பட 15 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாடு மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி சிறப்பு திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று அறிமுகம் செய்தார்.

இத்திட்டம் 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 60 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க வழிகோலும் என்று அரசு தெரிவித்துள்ளது.

மின்னணுவியல் உற்பத்தி சூழல் அமைப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்

❖❖❖❖❖

கீதா ஜீவன்

தமிழகத்தில் வரும் ஜூன் 4-ம் தேதி முதல் நடைபெறவுள்ள மக்களுடன் முதல்வர் முகாமின் போது மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியான பெண்கள் விண்ணப்பிக்கலாம் என மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட மேட்டுப்பட்டி அம்பேத்கர் நகர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 அங்கன்வாடி மைய கட்டடங்களை இன்று திறந்துவைத்து பேசியஅவர், மாவட்டத்தில் பழுதடைந்த அங்கன்வாடி மையங்கள் சீரமைக்கப்படும் என்றார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

காந்தி

ராணிப்பேட்டை சோழிங்கர் அருள்மிகு சோழபுரீஸ்வரர் கோவில் புனரமைப்பு பணிகளுக்கான பூர்வாங்க பணிகளை மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி இன்று துவக்கி வைத்தார்.

43 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி நடைபெற்றது. பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

❖❖❖❖❖

கிராமசபை கூட்டம்

தொழிலாளர் தினமான மே தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி தமிழகத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டங்கள் நடைபெற உள்ளன.

அரியலூர் மாவட்டத்தில் 201 கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கூட்டங்களில் பெருமளவில் பொதுமக்கள் பங்கேற்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி அறிவுறுத்தியுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் பொதுநிதி செலவீனம், இணையவழி மனைபிரிவு, கட்டட அனுமதி உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖

பிரேமலதா விஜயகாந்த்

தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுக்குழு, செயற்குழு கூட்டம் கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் இன்று நடைபெற்றது.

போப் ஃபிரான்ஸிஸ் மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பது, பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் உள்ளிட்ட 10 தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

❖❖❖❖❖

இருவரி

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

மாநகராட்சி ஆணையர் திரு.சரவணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

வேலூர் மாவட்டம் காட்பாடி ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகளின் உடைமைகளை பாதுகாக்கும் வகையில் நவீன டிஜிட்டல் லாக்கர் அறையை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நிலையத்தின் மேலாளர் திரு.வெங்கட்ராமன் இன்று திறந்து வைத்தார்.

❖❖❖❖❖

<u>உப்பு சத்தியாகிரகம்</u>

உப்பு சத்தியாகிரக 95-வது தண்டியாத்திரை நினைவு தினத்தின ஒருபகுதியாக நாகை வேதாரண்யம் அகஸ்தியம்பள்ளியில் தியாகிகள், பொதுமக்கள், மாணாக்கர் பங்கேற்ற உப்பு அள்ளும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

.. வாய்ஸ் ..

முன்னதாக நேற்று முன்தினம் திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட யாத்திரை குழுவினர் ஸ்ரீரங்கம், திருவையாறு, மன்னார்குடி, திருத்துறைபூண்டி வழியாக வேதாரண்யம் சென்றடைந்தனர்.

❖❖❖❖❖

<u>ஸ்ரீ சுப்ரமணிய கணேச ஷர்மா</u>

காஞ்சிபுரம் சங்கர மடத்தின் 71-வது இளைய பீடாதிபதியாக ஆந்திர மாநிலத்தை சேர்ந்த ஸ்ரீ சுப்ரமணிய கணேச ஷர்மா இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஆந்திர மாநிலம் காக்கிநாடாவை சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட குச்சிப்புடி பரதநாட்டிய கலைஞர்கள் அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கிரிவல பாதையில் நடனமாடியபடி கிரிவலம் வந்தனர்.

❖❖❖❖❖

<u>கோவில்</u>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் இன்று கருடசேவை நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

<u>பணி ஓய்வு</u>

தர்மபுரி வானொலி நிலையத்தின் தொழில்நுட்பாளர் **N.T.** இளங்கோ இன்று பணி ஓய்வு பெறுகிறார்.

நெய்வேலி, கிருஷ்ணகிரி தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் உள்ளிட்டவற்றில் 37 ஆண்டுகள் இவர் பணியாற்றி உள்ளார்.

❖❖❖❖❖

<u>தீ விபத்து</u>

விருதுநகர் சாத்தூர் முத்தாண்டிபுரம் பகுதியில் இன்று அதிகாலை பட்டாசு கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சரூபாய் மதிப்பிலான பட்டாசுகள் வெடித்து சிதறின.

ஏழாயிரம் பண்னை காவல்துறையினர் வழக்கு பதிவுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

❖❖❖❖❖

<u>டென்னிஸ் **Spain**</u>

ஸ்பெயினில் நடைபெறும் மேட்ரிட் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரோஹன் போப்பன்னா, அமெரிக்காவின் ஷெல்டன் இணை – அர்ஜெண்டினா இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖

<u>டென்னிஸ் - சீனா</u>

சீன **Guangzhou -**வில் நடைபெறும் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சீனாவின் சன் இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை பிலிப்பைன்ஸ், தாய்லாந்து இணையை
7-5, 6-2 என்ற செட்கணக்கில் வென்றது.

❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர்கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖